1974 ஏப்ரல் 10]

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, சில முதன்மைக் கல்வி அதிகாரிகள் 1—4—1974-க்குப் பிறகு ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு மட்டுமே இது பொருந்தும், முன்பு ஓய்வுபெற்றவர்களுக்கு இல்லை என்கிறார்கள். எனவே இதை அரசு தெளிவுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி ஆராயப்படும்.

Vacant posts of subject Teachers

* 292 Q.—THIRU K.S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a number of posts of subject teachers in Government 'B' Wing Schools have been kept vacant for a long time; and

(b) if so, the steps taken by the Government to fill up these vacancies?

காலியாக உள்ள பாட ஆசிரியர்களின் பதவிகள்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் 'பி' பிரிவு (கழக) உயர்நிலைப்பள்ளிகளில் பாட ஆசிரியர்கள் பதவிகள் பல, நெடுநாட்களாகக் காலியாக உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அந்தக் காலி இடங்களை நிரப்புவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, பல பள்ளிகளில் விஞ்ஞானப் பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பதிலாக ஹிஸ்டரி, ஜாக்ரஃபி ஆசிரியர்களைக் கொண்டே பாடம் நடத்துகிறார்கள். சில பள்ளிக்கூடங்களில் பௌதிக பாடம் விருப்பப்பாடமாக இருக்கிறது. பௌதிக பாடம் படித்த ஆசிரியர்களே அந்தப் பள்ளிக்கூடங்களில் இல்லை. முசிறியிலே உள்ள ஆசிரியர் பயிற்சிப்

பள்ளியிலே மூன்று ஆசிரியர்கள் உள்ளார்கள். ஒருவர் ஹிஸ்டரி, ஜாக்ரஃபி. இன்னொருவர் பாடக்காரர். மூன்றாமவர் தமிழ் ஆசிரியர். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலிருப்பதால், கல்வியின் தரம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. இனியேனும் இந்தத் தவறுகள் நடக்காமலிருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆங்காங்கு ஏற்படுகின்ற ஒன்றிரண்டு குறைபாடுகளுக்கு என்ன காரணம் என்பதைத் தனித்தனியாகக் காண வேண்டும். ஆனால் குறிப்பிட்ட பாடத்தை நடத்துவதற்கு ஆசிரியரே இல்லை என்ற நிலை ஏற்படுமானால் என்ன மாற்றுத் திட்டம் என்று கவனிக்க வேண்டும். ஆசிரியர் இருந்தும் போடாமலிருந்தால், ஏன் போடவில்லை என்ற காரணங்களை அறிய வேண்டும். இப்பொழுது ஆண்டு ஆரம்பத்திலேயே பள்ளிகளிலே உள்ள காலியிடங்களை முன்னரே மதிப்பிட்டு வேலை தேடித்தரும் நிலையங்களிலே பட்டியலைப் பெறுவதற்கான நடவடிக்கையை கோடை விடுமுறையில் முடித்துவிடவேண்டும். பள்ளிகளிலே திரும்பவும் காலியிடங்களை நிறைவு செய்ய வேண்டுமென்று நியமனம் செய்யும் அலுவலர்கள்—அப்பாயின்டிங் அத்தாரிடீஸ்க்கு—அறிவுரை வழங்கும்படியாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

Representation from the Second Grade Tamil Pandits Association.

* 293 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation during November 1973, from the Second Grade Tamil Pandits Association; and

(*b*) if so, the details thereof?

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் கழகத்தின் முறையீடு

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் கழகத்திடமிருந்து, 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?